# மீண்டும் திராவிட மாடல் 2.0 மலரும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு இனமானப் பேராசிரியரின் திருமகன் அ.அன்புச்செல்வன் கடிதம்!

அன்பு கெழுமிய நண்பர், தலைவர், திராவிட மாடல் அரசின் மானமிகு முதல்வர் ஸ்டாலின் அவர்களே,

அன்பான வணக்கம்,

சொன்னதை செய்வோம்!! சொல்லாததையும் செய்வோம்!! என்று முழங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மகனாகவும், தொண்டராகவும் சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேலாக அரசியல் பாடம் பயின்றவர் தாங்கள்.

கழகத்தின் அடிமட்டத் தொண்டனாகி, கழகத்தின் அமைப்பில் பல்வேறு பொறுப்புகளில் சிறப்பாக தொண்டாற்றி படிப்படியாக உயர்ந்து தியாகத் தழும்புகளை ஏற்று, சலியாது உழைத்து, கழகத்தை வழிநடத்தும் தலைமை பொறுப்பில் ஆற்றல் மிக்கவராக மிளிர்கிறீர்கள்.

கழகத்தின் பணிகள் இடையறாது தொடர அடுத்த தலைமுறையை உருவாக்க 1980 ஆம் ஆண்டில் மதுரை ஜான்சி ராணி பூங்காவில் இளைஞர் அணியை தொடங்கி வைத்தவர்கள் முத்தமிழறிஞர் கலைஞரும், இனமானப் பேராசிரியர் பெருந்தகையும்.

**தந்தை பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளையும் அதனை அரசியல் ஆட்சி அதிகாரத்தின் மூலம் நிறைவேற்றிய கழகத்திற்கு இளம் தலைமுறையினரையும் ஈர்க்க உருவாக்கப்பட்ட இளைஞரணி தான் கழகத்தினை அடுத்தக் கட்டத்திற்கு இட்டுச் செல்லும் என்பதில் உறுதியாக இருந்தவர் இனமானப் பேராசிரியர் அவர்கள், அத்தகைய அணியின் தலைமைப் பொறுப்பை ஏற்க திறன் கொண்டவர் தாங்கள்தான் என்று அடையாளப்படுத்தியவர் இனமானப் பேராசிரியர், அவரது கணிப்பு தவறவில்லை.**

கழகத்தின் அடிமட்டத் தொண்டனாக தொடங்கிய தங்களின் கழகப் பயணம் வட்டக் கழகப் பிரதிநிதி, இளைஞர் அணிச் செயலாளர், கழகத்தின் பொருளாளர், செயல் தலைவர், பின்னர் தலைவராகி இம் மாபெரும் கழகத்தை வழிநடத்தும் மகத்தான பொறுப்பை திறம்பட நிறைவேற்றி வருகிறீர்கள்.

**கழகத்தின் நோக்கங்கள் நிறைவேற சலியாத உழைப்பை நல்கி கழகத்தை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லும் பெரும் பொறுப்பை ஏற்றுள்ள தங்களின் உழைப்பிற்கு மக்களின் அன்பும், ஆதரவும், கழகத் தொண்டர்களின் ஒத்துழைப்பும் கிட்டியுள்ளது. மகத்தான வெற்றி 2026 ஆம் ஆண்டிலும் கிடைக்கும், மீண்டும் திராவிட மாடல் 2.0 மலரும். உங்களின் கம்பீரக் குரல் பதவியேற்பு விழாவில் ஒலிக்கும்.**

**கொள்கைப் பலமும், அர்ப்பணிப்பு உணர்வோடும் செயல்படும் கோடிக்கணக்கான கொள்கை மறவர்கள் கொண்ட கழகத்தை எஃகுக் கோட்டையாக்கி தொடர் வெற்றிகளின் நாயகராகத் திகழும் தங்களுக்கு நிகர் இன்றைய தமிழக அரசியல் களத்தில் எவரும் இல்லை.**

2011-2021 ஆகிய பத்தாண்டுகளில் அ.தி.மு.க.வின் ஆட்சிக் காலத்தில் தமிழகம் எல்லாத் துறைகளிலும் படுபாதாளத்திற்கு தள்ளப்பட்டது, நிர்வாகச் சீர்கேடுகள் மற்றும் ஊழல் மலிந்த ஆட்சியை தந்தது அ.தி.மு.க. அரசு. மாநில உரிமைகளை



ஒன்றிய பா.ஜ.க. அரசிடம் பறிகொடுத்தது, அதற்கு ஒரேயொரு உதாரணம் போதும், பத்தாண்டுக் ஆட்சிக் காலத்தில் தமிழக இளைஞர்களின் வேலை வாய்ப்பை பறிக்கும் வகையில், தமிழக அரசில் எழும் வேலைவாய்ப்புகளில் வெளி மாநிலத்தவரும் பங்கேற்கச் சட்டத் திருத்தம் செய்யப்பட்டது. இதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான வெளிமாநிலத்தவர் தமிழக அரசுப் பணிகளில் பணியமர்த்தப்பட்டனர். வடவர்கள் வேலைவாய்ப்பை பெற்றனர். தமிழ்நாட்டின் இளைஞர்களின் வாழ்வாதாரத்தைப் பறித்தது அ.தி.மு.க. ஆட்சி. இது மட்டுமல்ல; பல்வேறு மாநில உரிமைகளை ஒன்றிய பா.ஜ.க.வின் வற்புறுத்தலுக்கு அடிபணிந்து இழந்தது. பேரறிஞர் அண்ணா பெயரை கட்சிக்கும், கொடியில் அண்ணாவின் படத்தையும் தாங்கிய கட்சி, பேரறிஞர் அண்ணா தனது இறுதி உரையில் வலியுறுத்திய மாநில உரிமைகள் மீட்பை கைவிட்டு விட்டு அதற்கு நேர்மாறாக மாநில உரிமைகளை ஒன்றிய அரசிடம் இழந்துள்ளது.

மாநில உரிமைகள் மீட்புப் போராட்டத்தை கழகத்தின் முதன்மை குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருவது தமிழகத்தின் உரிமைகளைக் காக்கும்.

இத்தகைய சூழலில் 2021 சட்டமன்றத் தேர்தலுக்கு ஒரு மாதத்திற்கு முன்னர் மார்ச் 7 ஆம் தேதியன்று, தமிழகத்தின் 'விடியலுக்கான முழக்கம்' என்ற பெயரில் தி.மு.க.வின் பிரம்மாண்ட தேர்தல் சிறப்புப் பொதுக்கூட்டம் திருச்சி - சென்னை பைபாஸ் சாலையில் சிறுகனூரில் நடைபெற்றது.

### தி.மு.க.வின் கனவுகளை அறிவிக்கும் கூட்டம்!

'தமிழகத்துக்கான எனது கனவுகளை அறிவிக்கும் கூட்டம் தான் இந்த மாநாடு' என்று அக்கூட்டத்தின் தலைவரான தாங்கள் நெகிழ்ச்சி பொங்க உரையாற்றி தொண்டர்களை உற்சாகப்படுத்தினீர்கள்.

தமிழகத்தின் பொருளாதாரம், வேளாண்மை, நீர் வளம், கல்வி மற்றும் சுகாதாரம், நகர்ப்புற வளர்ச்சி, ஊரக உட்கட்டமைப்பு, சமூக நீதி ஆகியவற்றை மேம்படுத்த 'ஸ்டாலினின் 7 உறுதிமொழிகள்' என்ற தலைப்பில் தொலைநோக்குத் திட்டத்தை வெளியிட்டீர்கள். இந்த உறுதிமொழியை தமிழகமெங்கும் பரப்பிய நமது கழக உடன்பிறப்புகள் 2021ஆம் ஆண்டில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வெற்றிக் கனியைப் பறித்து தங்கள் தலைமையில் திராவிட மாடல் ஆட்சியை அமைத்தனர்.

2021-ல் பதவியேற்றதும் பத்திரிக்கையாளர்களிடத்தில் உரையாடிய தாங்கள் தெரிவித்தகருத்துமிகமிக முக்கியமானது "திராவிட மாடல் ஆட்சி அமைய வாக்களித்தவர்கள் பெருமைப்படும்படியாகவும், வாக்களிக்கத் தவறியவர்களும், வாக்களிக் க்காமல் போய்விட்டோமே என்று வருந்தும் வகையில் சிறப்பாக இந்த அரசு செயல்படும்" என்று உறுதிபடக் கூறியபடியே, சிறப்பானதொரு ஆட்சியை தந்துள்ளீர்கள்.

ஆட்சிப் பொறுப்பேற்றபோதே உலகெங்கும் உயிர்ப்பலி வாங்கிக் கொண்டிருந்த 'கொரோனா' தமிழ்நாட்டிலும் கோர ஆட்டம் ஆடிக் கொண்டிருந்தது.

ஆயிரக்கணக்கானவர்கள் கொரோனா தொற்றால் மாண்டனர். தகுந்த மருத்துவர்களையும், தொற்று நோய் வல்லுனர்களின் ஆலோசனைகளைப் பெற்று கொரோனா பெருந்தொற்றிலிருந்து மக்களை காக்க உறுதியுடன் செயல்பட்டு அரசு நிர்வாகத்தை முடுக்கி மருத்துவமனைகள் முழு வீச்சில் செயல்பட ஆவன செய்தவர் தாங்கள் தான். தடுப்பூசிகள் தாராளமாகக் கிடைத்திட தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டீர்கள். இதன் உச்சகட்டமாக கோவை மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்ட பின்னர் கொரோனா பெருந்தொற்று வார்டுக்குள் கவச உடையணிந்து துணிந்து சென்று கொரோனா நோயாளிகளைப் பார்த்து "அச்சப்படாதீர்கள் நான் இருக்கிறேன் உங்களை காக்க" என்று தைரியமூட்டியதை உலகமே கண்டு வியந்தது.

நான்கரை ஆண்டுகளுக்கு முன்னர் அமைந்திட்ட திராவிட மாடல் அரசு எல்லோருக்குமான அரசாகத் திகழும் என்று பதவியேற்ற அன்றே அறிவித்தீர்கள். அத்தகைய ஆட்சி "எல்லோருக்கும் எல்லாம்" என்ற அரிய தத்துவத்தின் அடிப்படையில் நடைபெறும் என்றும் அறிவித்தீர்கள்.

2021 ஆம் ஆண்டு துவங்கிய திராவிட மாடல் அரசின் பயணம், மாற்றாரும் வியக்கும் வண்ணம் பீடுநடை போடுகிறது. திராவிட மாடல் அரசின் சாதனைகளை பட்டியலிட்டால் பல்லாயிரம் பக்கங்களை நிரப்பும்.

பள்ளிக்கல்வி தொடங்கி உயர்கல்வி வரை, பொருளாதார வளர்ச்சி, மக்கள் நல்வாழ்வு மேம்பாட்டு, வேளாண் வளர்ச்சி முதல் தொழில்துறை வளர்ச்சி வரை, பள்ளி சிறார்களுக்கு காலை உணவு தொடங்கி அவர்தம் ஆற்றலையும் அறிவினையும் பெருக்கிட நான் முதல்வன் வரை, மகளிருக்கு உரிமைத் தொகை, மகளிருக்கு விடியல் பயணம் தொடங்கி, மாணவக் கண்மணிகளுக்குப் புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் வரை என துறைதோறும் துடித்தெழுந்துள்ளது தமிழ்நாடு!

29/04/2025 ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் உரையாற்றிய தாங்கள் பின்வருமாறு பேசினீர்கள்:

**"2024-25 ஆண்டில் இந்தியாவின் நம்பர் - 1 ஆக தமிழ்நாடு 9.6 விழுக்காடு பொருளாதார வளர்ச்சி அடைந்திருக்கிறது. இது மேலும் வளர்ச்சி அடைந்து 14 வருடங்களுக்குப் பிறகு 11.19 சதவீதமாக உயர்ந்துள்ளது,**

**இதுவரை தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்தது கிடையாது. இதனை நாம் சொல்லவில்லை, தமிழ்நாட்டிற்கு எதிரான நிலையில் ஓரவஞ்சனையுடன் செயல்படும் ஒன்றிய அரசின் புள்ளி விவரங்களே தெரிவிக்கின்றன.**

**இதுவரை இல்லாத உச்சமாக 15 மில்லியன் டாலர் அளவுக்கு மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் தமிழ்நாடு சாதனை படைத்துள்ளது.**

**கல்வித்துறையில் கடந்த நான்கு ஆண்டுகளில் இடைநிற்றலே இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. உயர்கல்வியின் வளர்ச்சி தமிழ்நாட்டில் 47 சதவீதமாக உயர்ந்துள்ளது.**

**தமிழ்நாட்டில் வறுமை கோட்டுக்குக் கீழே இருப்போர் 1.43 சதவீதம் மட்டுமே.**

**மேலே பாம்பு, கீழே நரிகள், குதித்தால் அகழி, ஓடினால் தடுப்புச் சுவர் என்று ஒரு பக்கம் ஒன்றிய அரசு, மறுபுறம் ஆளுநர், நிதிப்பகிர்வில் ஓரவஞ்சனை என்று எல்லா தடைகளையும் தாண்டி சாதனை படைத்து வருகிறோம்** என்றுரைத்தீர்கள்.

இதனை கண்டுதான் நாட்டிலேயே நம்பர் ஒன் முதல்வராக அறியப்படுகிறீர்கள். உங்களது வெற்றி, கழகத்தவர் அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது.

இதுவரை இல்லாத அரசியல் சதுரங்கத்தை, தமிழ்நாட்டில் புகுத்தியாட R.S.S. பா.ஜ.க. கூட்டங்கள் ஒன்றிய அதிகாரத்தை வைத்துக்கொண்டு காய்நகர்த்தத் துடிக்கிறார்கள்!

இத்தகைய அரசியல் சூழலில் தங்களின் வியூக அரசியலை தாங்கள் நுணுக்கத்.தோடு கையாள்வதின் மூலம் தி.மு.க.வை மீண்டும் அரியணையேற்றுவது காலத்தின் கட்டாயம்!!

மாநிலத்தின் அமைதியையும், சமூக நல்லிணக்கத்தையும் கெடுக்க முனைந்திடும் மதவாத சக்திகளும், என்னைத் தொட்டுப்பார் என்கிற கூச்சல் கூட்டங்களுக்கு மத்தியில் அமைதியையும் நிதானத்தையும் சாதுரியமாக கையாண்டு மாநிலத்தில் எந்தவித சிறு சிறு சலசலப்பையும் உருவாக்க இடந்தராமல் மிகவும் நிதானமாக அரசை வழிநடத்தும் தங்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**இம்மகத்தான பணியில் உங்களுக்குத் துணையாகவும், திராவிட இயக்கத்தின் கொள்கைகளையும், வேலைத் திட்டங்களை அடுத்த ஐம்பது ஆண்டுகளுக்கு வழி நடத்தும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுள்ள நமது இளைஞர் அணியின் செயலாளர் மாண்புமிகு துணை முதல்வர் தம்பி உதயநிதி அவர்கள் திராவிட இயக்கக் கொள்கைகள் வெல்வது தமிழ்நாட்டுக்கு மிக மிக அவசியம் என்ற புள்ளியில் இயங்குபவர்.**

**"திரும்பத் திரும்ப கொள்கையை பேசுங்கள்" என்று தலைவர் கலைஞர் கட்டளையிட்டதை நிறைவேற்றி வருகிறார் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். புதிய, புதிய இளைஞர்களை கழகத்தின் பால் ஈர்த்து அவர்களுக்கு கொள்கை உரம் ஊட்டி தரமான இளைஞர் பட்டாளத்தை உருவாக்கும் அரும் பணிகளை செவ்வனே செய்து வருகிறார்.**

**கொள்கைப் பற்றும், திராவிடச் சித்தாந்தத்தில் தெளிவும், எளிதில் பின் வாங்காத மன உறுதியையும் அவரின் தலைமைப் பண்புகளுக்கு சாட்சியாக விளங்குகிறது.**

**நமது வேர்கள் எங்கே இருக்கிறது என்பதை புரிந்துகொள்வது அவசியம். சித்தாந்த ரீதியாக, கொள்கை ரீதியாக இளைஞர்களை தயார்படுத்துவது அதில் மிக முக்கியமானது. அந்தப் பணியை சிறப்பாக செய்கிறார், இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின். உங்களின் வழிகாட்டுதலில், கழக இளைஞர் அணி இதில் முன்னோடியாகச் செயல்படுகிறது. இயக்கமும், கட்சியும் வேறல்ல என்பதை உணர்ந்துள்ளவர் நமது வருங்கால நட்சத்திரம் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.**

**அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தர்க் கியல்பு. (குறள் - 382)**

மேற்கூறிய குறளுக்கு பொழிப்புரை எழுதிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கூறியதாவது "துணிவு, இரக்க சிந்தை, அறிவாற்றல், உயர்ந்த குறிக்கோளை எட்டும் முயற்சி ஆகிய நான்கு பண்புகளும் அரசுக்குரிய தகுதிகளாகும்.

**- கலைஞர்**

மேற்கூறிய குறளுக்கு முழுக்க பொருத்தமானவர் தாங்கள் தான்.

கொள்கை உணர்வோடு கட்டுக்கோப்பான கழக உடன்பிறப்புகள் இருப்பதால், நம்மை வெல்ல யாராலும் முடியாது. காலத்தை நாம் வெல்வோம். திராவிடம் வெல்லும்.

இவண்,

**அ.அன்புச்செல்வன்**

**15.12.2025**

---

ஓய்வூதிய

# சீர்திருத்தங்களின் காலக்கெடுவில் குழப்பம்!

## மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் ஒத்திவைப்பு தீர்மானம்!

*புதுடெல்லி, டிச. 16- நாடாளுமன்ற மக்களவையில் மிகவும் அவசர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு திட்டவட்டமான விஷயத்தைப் பற்றி விவாதிப்பதற்காக, சபை அவை நடவடிக்கைகளை ஒத்திவைப்பதற்கான தீர்மானத்தை வேலூர் தொகுதி உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் தாக்கல் செய்ததன் விபரம் வருமாறு:*

*வேலையின்மை, மருத்துவ அவசரநிலைகள் மற்றும் பொருளாதார அழுத்தத்தின் போது அத்தியாவசிய நிதி நிவாரணம் போன்ற EPF திரும்பப் பெறுதல் மற்றும் முன்பணக் கோரிக்கைகள் ஆதார்UAN பொருந்தாத தன்மை, பணியாளர் சரிபார்ப்பு குறைபாடுகள், CPCS இடர்பாடுகள் மற்றும் தொடர்ச்சியான EPFO போர்டல் செயலிழப்புகள் காரணமாக சட்டப்பூர்வ 20 நாள் காலக்கெடுவைத் தாண்டி தாமதமாகி வருவது வருத்தமளிக்கிறது.*

*ஒன்றிய அரசின் சமீபத்திய முடிவு, முழு EPF திரும்பப் பெறுதலுக்கான*



*வேலையின்மை காத்திருப்பு காலத்தை 2 மாதங்களிலிருந்து 12 மாதங்களாகவும், EPS திரும்பப் பெறுதலை 2 மாதங்களிலிருந்து 36 மாதங்களாகவும் உயர்த்தியதால், அதிகரித்து வரும் வேலையின்மை மற்றும் பணவீக்கம் காரணமாக லட்சக்கணக்கான வேலை தேடும் குடும்பங்கள் தங்கள் சொந்த சேமிப்புகளை அணுகி பெற முடியாமல் தவிக்கின்றன.*

*இது கோடிக்கணக்கான EPF சந்தாதாரர்கள் வாழ்வாதாரத்தை பெரிதும் பாதிக்கிறது, அவர்கள் போர்டல் செயலிழப்புகள், காலாவதியான பாஸ் புக்குகள், KYC பிழைகள் மற்றும் 2025-26 நிதியாண்டிற்கான EPF வட்டி விகிதம் அல்லது 15,000 ஊதிய உச்சவரம்பை நீக்குதல் போன்ற EPS ஓய்வூதிய சீர்திருத்தங்களுக்கான காலக்கெடு குறித்து தெளிவின்மை ஆகியவற்றை எதிர்கொள்கின்றனர்.*

*எனவே, தேசிய அளவில் மிகவும் கவலைக்குரிய இந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்க சபையை ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு கதிர் ஆனந்த் மக்களவையில் சபை ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டு வந்தார்.*

---

வெளிநாடுகளில் பணிபுரியும் இந்திய குடிமக்களுக்கு

# மருத்துவ அவசர நிலைகளை எதிர்கொள்ள அரசு உதவி வழங்குகிறதா?

## மக்களவையில் தே. மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, டிச.16 – மக்களவையில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் எழுப்பிய கேள்வி வருமாறு:–

வெளிநாடுகளில் வசிக்கும் போதோ, பணிபுரியும்போதோ அல்லது பயணம் செய்யும்போதோ மருத்துவ அவசரநிலைகளை எதிர்கொள்ளும் இந்திய குடிமக்களுக்கு ஒன்றிய அரசு உதவி வழங்குகிறதா, அப்படியானால், அத்தகைய உதவியை நிர்வகிக்கும் கொள்கைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் பற்றிய விவரங்கள் என்ன?

அவசர உதவி எண்கள் கிடைப்பது, மருத்துவமனைகளுடனான தொடர்பு, மருத்துவ வெளியேற்றம் அல்லது திருப்பி அனுப்புதலை



எளிதாக்குதல் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு, குறிப்பாக கள்ளக்குறிச்சி மக்களவைத் தொகுதியைச் சேர்ந்த தனிநபர்களுக்குத் தெரிவித்தல் உள்ளிட்ட மருத்துவஅவசரநிலைகளில் இந்திய தூதரகங்கள் மற்றும் இடுகைகள் ஆதரவை எவ்வாறு வழங்குகின்றன ?

கடந்த மூன்று ஆண்டுகளில், நாடு வாரியாக மற்றும் ஆண்டு வாரியாக, இந்திய தூதரகங்கள், உயர் ஸ்தானிகராலயங்கள் மற்றும் தூதரகங்களால் கையாளப்பட்ட மருத்துவ அவசரநிலை வழக்குகளின் எண்ணிக்கை எவ்வளவு?

கடந்த மூன்று ஆண்டுகளில், இந்திய சமூக நல நிதியிலிருந்து (ICWF) உட்பட, கடுமையான மருத்துவ அவசரநிலைகளின் போது துன்பத்தில் உள்ள இந்தியர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டதா, அப்படியானால், வழங்கப்பட்ட தொகையின் விவரங்கள் என்ன?

இந்திய புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான ஆதரவு அமைப்புகளை வலுப்படுத்த ஒன்றிய அரசு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்